# குளித்தலை நகராட்சி

28.05.2019.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. தமிழ்நாடு அரசு நிதி(படிகள்) துறை, அரசு ஆணை எண்.151, நாள்–20.05.2019.ன்படி, அகவிலைப்படி 9%-லிருந்து 12%-ஆகவும், அரசாணை(நிலை) எண்.153, நாள்–20.05.2019.ன்படி 148%-லிருந்து 154%-ஆகவும் உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1153/2019/சி1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் மார்ச்–2019 மற்றும் ஏப்ரல்–2019.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2019–2020.ஆம் ஆண்டுக்கான ஆயுள் காப்பீடு கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வண்டி எண். | வண்டியின் விபரம் |
|---|---|---|
| 1) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 2) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ |
| 5) | TN-47-F-1522 | கழிவுநீர் ஊர்தி |
| 6) | TN-47-AY-6449 | BEML, Front & Back Loader |

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). மேற்கண்ட செலவினங்களை ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1060/2019/எச்1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு ஆயுள் காப்பீடு நிறுவனத்தின்மூலம் வரப்பெற்றுள்ள கடிதத்தின்படி, ரூ.28644/–, யுனைட்டேடு இந்தியா காப்பீடு நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). மேற்கண்ட செலவினங்களை ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.94/2019/எச்1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் பழுதுகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ஜீவன் ஏஜன்ஸீஸ், துவாக்குடிமலை, திருச்சி நிறுவனம் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டது மற்றும் மேற்படி நிறுவனத்திற்குரிய பட்டியல் தொகை ரூ.25370/–ஐ, வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.620/2019/இ1)

பொருள்– 06. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5109 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் செய்ய, நாள்–28.02.2019.ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | செலவினம் |
|---|---|---|
| 1) | Dominic Auto Garage, 23-Anbil Dharmalingamnagar, Edamalaipatti Pudur, Tiruchirappalli, PIN- 620 012. | ரூ. 70560.00 |
| 2) | Janatha Auto Diesel Works, 32A-Pookkollaistreet, Tanjore road, Trichy – 620 008. | ரூ. 62944.00 |

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). இந்நகராடசி அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும், பில்பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.177/2019/எச்1)

பொருள்– 07. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு வாகனங்களுக்கு சாலைவரி மற்றும் பசுமைவரி கீழ்க்கண்ட விபரப்படி வட்டார போக்குவரத்து கழகம், குளித்தலை அலுவலகத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வண்டி எண். | சாலைவரி | பசுமைவரி |
|---|---|---|---|
| 1) | TN-47-E-0264 | 4555.00 | 0 |
| 2) | TN-47-F-1522 | 3000.00 | 515.00 |
| 3) | TN-47-X-0031 | 7282.00 | 515.00 |
| 4) | TN-47-AS-5370 | 4252.00 | 0 |
| 5) | TN-47-AY-6449 | 10000.00 | 0 |
| | Total Rs. | 29089.00 | 1030.00 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). TN-47-E-0264 குடிநீர் வாகனத்திற்கு ரூ.4555.00 குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). இதர பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு சாலைவரி மற்றும் பசுமைவரி ஆகியவற்றை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4). மேற்கண்ட செலவினங்களை ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.649/2019/எச்1)

பொருள்– 08. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு 24.01.2019.ல் விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை ரூபாய் |
|---|---|---|
| 1) | Green Power Care Online UPS – UPS Batteries, Musiri. | ரூ. 7800.00 |
| 2) | Radar Power System UPS – Inverters – Batteries, Trichy. | ரூ. 8000.00 |
| 3) | Sri Madura Power's UPS – Solar UPS – Batteries, Kulithalai-639 104. | ரூ. 7100.00 |

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை பொதுநிதியில் (or) திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). இந்நகராட்சி அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் பில்பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.63/2019/எச்1)

பொருள்– 09. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மற்றும் புகைபோக்கி இயந்திரங்களுக்கு 2019–2020.ஆம் ஆண்டுக்கான டீசல் மற்றும் பெட்ரோல் K.M.V.N.N.பிரேம்குமார் பெட்ரோல் பங்கில் பிடிப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வண்டி எண். | வண்டியின் விபரம் |
|---|---|---|
| 1) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 2) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ |
| 5) | TN-47-F-1522 | கழிவுநீர் வாகனம் |
| 6) | TN-47-AY-6449 | BEML, Front & Back Loader |
| 7) | புகைபோக்கி இயந்திரங்கள் | |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1054/2019/எச்1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கையாக முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு 2019–2020.ஆம் ஆண்டுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற Paramount Pesticides Limited, சென்னை நிறுவனத்திடம், Pyrethrum 2% extract புகை மருந்து 230 லிட்டர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூபாய் 3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1041/2019/எச்1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில், தூய்மை இந்தியா திட்டம் 2018–2019.ல், திடக்கழிவு மேலாண்மை பணியாகிய 51711 m3 அளவுள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அகற்றும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேரடி அறிவுரையின்படி, மேற்படி திட்ட மேலாண்மை தொழில்நுட்ப ரீதியிலான ஆலோசனை(PMC) மற்றும் ஒவ்வொரு கட்டத்திலும் நேராய்வு செய்து பணி முடித்தமைக்கான சான்று வழங்கும் பணிக்கான கட்டணம் ரூ.8,85,000/–ஐ, இயக்குநர், சுற்றுச்சூழல் கல்வி மையம், அண்ணா பல்கலை கழகம், சென்னை அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). தேர்தல் நடத்தை விதிகள் செயல்பாட்டில் உள்ளதால், ஆணையர்(பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ.8,85,000/– கட்டணம் செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்(FSTP) குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சி ஆகியவற்றிற்காக அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. துறை தலைவர், அண்ணா யுனிவர்சிட்டி, திண்டுக்கல்–624622 கடிதம் பெறப்பட்டுள்ளதன்படி Stuctural Design பணி மேற்கொள்ள இயக்குநர், CTDT அண்ணா பல்கலை கழகம், சென்னை–25 பெயரில், வங்கி வரைவோலையாக ரூ.1,18,000/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், அவசர அவசியம் கருதி, ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி அலுவலக உள்புற, வெளிபுற பணியாளர்களின் வருகை பதிவேட்டினை பயோமெட்ரிக் இயந்திரம்மூலம் பதிவுசெய்ய வேண்டி உள்ளது. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் இரண்டு பயோமெட்ரிக் இயந்திரம் வாங்கியதன் பட்டியல் தொகை ரூ.1,27,440/–ஐ, கோல்ட் ஸ்பாட் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.327/2019/இ1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக நகரம் முழுவதும் உள்ள அரசியல் பேனர்கள், சுவரொட்டிகள் அகற்றுதல், சுவர் விளம்பரங்கள் அழித்தல், சுண்ணாம்பு பூசி மறைத்தல் உள்ளிட்ட பணிகள் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டதன் விபரம் மற்றும் ஒப்பந்ததாரர் திரு.எம்.செந்தில்குமார் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.49,500/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.525/2019/இ1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சி வார்டு எண்.15, சண்முகாநகர் பகுதி தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ் பொருத்த தேவையான மின் உபகரணங்கள் வாங்கும் பணி அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராடசிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி மின் உபகரணங்கள் சப்ளை செய்தல் M/s.கீதா எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.5,585/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.749/2019/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி பெரியபாலம் பகுதி மீன்காரதெரு தெருவிளக்குக்கு புதிய மின்மாற்றியிலிருந்து மின் இணைப்புக்கு ஸ்விட்ச் பாக்ஸ் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகம், குளித்தலை 08.04.2019 தேதிய கடிதத்தின்படி வைப்புத் தொகை ரூ.1609/– அவசர அவசியம் கருதி செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.748/2019/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சி கடம்பர்கோவில் தைப்பூச திருவிழா 21.01.2019.ல் நடைபெற உள்ளதன் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் குடிநீர், மின்விளக்கு, சாலை, கழிப்பிடம், சாலை தடுப்புகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்ததாரர் திரு.எம்.செந்தில்குமார் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.2.00 லட்சம் வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.96/2019/இ1)

பொருள்– 18. குளித்தலை நகராடசி நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் 20–எச்.பி. மின்மோட்டார் கேபிள் பழுதடைந்துள்ளதால், 16.எம்.எம். காப்பர் கேபிள் 3–கோர் 100 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பிரிவின் அவசர அவசியம் காரணமாக, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர்மூலம் புதியதாக மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு, பட்டியல் தொகை ரூ.76,000/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.489/2019/இ1)

..5..

பொருள்– 19. குளித்தலை நகராட்சி பகுதியிலான பாராளுமன்ற தேர்தல் வாக்கு பதிவு நடைபெறும் வாக்குச் சாவடிகளில் வாக்காளர்கள் பயன்பாட்டிற்கு சாமியானா நிழற்பந்தல் அமைக்க, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரைபடி நடவடிக்கை மேறகொள்ளப்பட்டு அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணியில் பட்டியல் தொகை ரூ.38,400/–ஐ, ஸ்ரீ ஸ்ரீனிவாசா சப்ளையர்ஸ் உரிமையாளர் ஏ.பரமசிவம் என்பவருக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.772/2019/இ1)

பொருள்– 20. குளித்தலை நகராட்சிக்கு வசூல் மைய இணைதள சேவைக்கான கட்டணம் ரூ.1,44,886/– செலுத்துமாறு, நகராட்சி நிர்வாக ஆணையரக மின் அஞ்சல் நாள்–27.03.2019.ல் கடிதம் பெறப்பட்டுள்ளது. அதன்படி 01.07.2018 முதல் 31.03.2019 வரையிலான காலத்திற்கு பி.எஸ்.என்.எல். அலைவரிசை பயன்பாட்டிற்கு ரூ.1,44,886/–ஐ, செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று உரிய கட்டணம் செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.65/2010/பி1)

பொருள்– 21. குளித்தலை நகராடசி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சி ஆகிவற்றிற்காக அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தின் ஆய்வுக்கு ஏற்கனவே ரூ.35,800/– செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணி (Red Category) ரெட் வகையில் வருவதால் ரூ.7800/– கூடுதல் கட்டணம் வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3). தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 22. குளித்தலை நகராட்சியின் முக்கிய இடங்களில் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தம், அரசு மருத்துவமனை, அரசு அலுவலகங்கள், நகராட்சி அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் நீர்மோர், குடிநீர் வழங்கும் கோடைகால பந்தல் அமைக்கும் பணி 2018–2019.ல் 2018.ல் ஏப்ரல் முதல் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் பணிக்கான பட்டியல் ரூ.99,828/– பொது நிதியிலிருந்து வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.998/2018/இ1)

பொருள்– 23. குளித்தலை நகராட்சியில் கீதா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தாரால் ஒப்பந்த அடிப்படையில் மின் உபகரணங்கள் மற்றும் குடிநீர் உபகரணங்கள் சப்ளைக்கு பெறப்பட்ட வைப்புத்தொகை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 27.07.1999.ல் | ரூ. | 500.00 |
| 27.07.1999.ல் | ரூ. | 100.00 |
| 27.07.1999.ல் | ரூ. | 500.00 |
| 11.08.1999.ல் | ரூ. | 2000.00 |
| 08.04.2003.ல் | ரூ. | 1500.00 |
| 23.12.2003.ல் | ரூ. | 1000.00 |
| 11.08.2006.ல் | ரூ. | 1000.00 |
| மொத்தம் | ரூ. | 6600.00 |

காலங்கடந்த நிலுவையாக உள்ளதை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.720/2017/இ1)

பொருள்– 24. குளித்தலை நகராட்சியில் கீதா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தாரால் ஒப்பந்த அடிப்படையில் மின்சார மற்றும் குடிநீர் உபகரணங்கள் சப்ளைக்கு பெறப்பட்ட வைப்புத்தொகை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 06.10.1998.ல் | ரூ. | 1000.00 |
| 29.10.1998.ல் | ரூ. | 500.00 |
| 29.10.1998.ல் | ரூ. | 200.00 |
| 27.07.1999.ல் | ரூ. | 100.00 |
| 11.08.1999.ல் | ரூ. | 2000.00 |
| 04.04.2000.ல் | ரூ. | 3000.00 |
| 31.03.2001.ல் | ரூ. | 3000.00 |
| 30.04.2001.ல் | ரூ. | 5000.00 |
| 24.04.2002.ல் | ரூ. | 5000.00 |
| 15.07.2004.ல் | ரூ. | 544.00 |
| மொத்தம் | ரூ. | 20344.00 |

காலங்கடந்த நிலுவையாக உள்ளதை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.719/2017/இ1)

பொருள்– 25. குளித்தலை நகராட்சி சொத்துவரி வரிவிதிப்பு எண்.083/019/00102, 5ஏ,கொல்லம்பட்டரைதெரு முகவரியிலான வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்க திருமதி.கே.சுஜாதா, 17.07.2018.ல் விண்ணப்பித்து உள்ளார். மேற்படி கட்டிடத்தில் கதவு எண்.5.ல் குடிநீர் இணைப்பு உள்ளதால், 5ஏ முகவரியிலான வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெற விரும்பாததால் 083/01/2/18–19/0002293, நாள்–17.07.2018.ல் செலுத்திய குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.3000/–ஐ, அன்னாரின் கோரிக்கையின்படி, திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2272/2018/இ1)

பொருள்– 26. குளித்தலை நகராட்சி சொத்துவரி வரிவிதிப்பு எண்.083/022/00416, 20/1,காவேரிநகர், குளித்தலை முகவரியிலான வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்க திரு.ஜி.விஜயகுமார், 06.03.2019.ல் விண்ணப்பித்து உள்ளார். மேற்படி கட்டிடம் வணிக அடிப்படையாக உள்ளதால் குடிநீர் இணைப்பு பெற விரும்பாததால் 083/01/1/18–19/0006087, நாள்–06.03.2019.ல் செலுத்திய குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை ரூ.3000/–ஐ, அன்னாரின் கோரிக்கையின்படி திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.507/2019/இ1)

பொருள்– 27. குளித்தலை நகராட்சி நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய கிணற்றுக்கு நீர்வரத்து குறைவாக உள்ளதால், அவசரஅவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் நீர்வரத்து ஏற்பட பணி மேற்கொள்ளப்பட்டது. ஆற்றின் நீரோட்டத்தில் இருந்து 35 அடி அகலத்தில் கனரக இயந்திரம்மூலம் மணல் சரியாமல் வாய்க்கால் அமைக்கப்பட்டது. பணி மேற்கொண்டது மற்றும் M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.4,62,082/–ஐ, வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.449/2019/இ1)

பொருள்– 28. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கிலான FSTP பணிக்கான இடத்தை 14,500m3 அளவில் பழைய குப்பைகளை அகற்றி டோசர்மூலம் தரையினை சமன் செய்யும் பணி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், குளித்தலை நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டதன் பட்டியல் தொகை ரூ.6,81,900/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.276/2019/இ1)

பொருள்– 29. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் மாவரைக்கும் இயந்திரம் மற்றும் குடிநீர் குளிர்விக்கும் இயந்திரம் ஆகியவற்றின் பழுதுகள் நீக்கம் செய்யும் பணிகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஜீவன் ஏஜன்ஸீஸ், துவாகுடி, திருச்சி நிறுவனத்தாரின் பட்டியல் தொகை ரூ.12,658/–ஐ, வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.569/2017/இ1)

பொருள்– 30. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் குளிர்சாதன பெட்டி பழுதுகள் முழுமையாக சரிசெய்தல் பணி அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஜீவன் ஏஜன்ஸிஸ், 7/92,அக்பர்சாலை, துவாகுடிமலை, திருச்சி–22 நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.21,240/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.578/2019/இ1)

பொருள்– 31. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தில் எரிவாயு குழாய், கியாஸ் பைப் லைன் பழுதுகள் நீக்கம் செய்து ஸ்டீம் ஜெனரேட்டர் பராமரிப்பு செய்தல் உள்ளிட்ட பணிகள் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டது. ஜீவன் ஏஜன்ஸீஸ், துவாக்குடி, திருச்சி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.18,290/– வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.570/2019/இ1)

பொருள்– 32. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் 15 லிட்டர் டில்டிங் கிரைண்டர் கியர் பாக்ஸ் முழுமையாக சர்வீஸ் செய்து, பழுதுகள் சரிசெய்தல் பணி அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ஜீவன் ஏஜன்ஸீஸ், துவாக்குடிமலை, திருச்சி–22 நிறுவனம் பணி மேற்கொண்டது மற்றும் பட்டியல் தொகை ரூ.5605/– செலவினம் மேற்கொண்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.624/2019/இ1)

பொருள்– 33. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019.ன்கீழ் மேற்கொள்ளப்படும் நான்கு பணிகளுக்கு தேசிய தொழில்நுட்ப கல்லூரிமூலம் மண் பரிசோதனை (SBC Test) மேற்கொள்ளப்பட்டதன் பட்டியல் கீழ்க்கண்ட விபரப்படி.

1). ஆலோசனை கட்டணம்
(புவி தொழில் நுட்ப ஆய்வு செய்து கட்டுமான பணிக்கான அடித்தளம் அமைப்பதற்கானவை)
அ) MCC (1).அண்ணாநகர் பார்க்,
(2).ஜெய்மகால் அவென்யூ பார்க்.
ஆ) சத்தியமங்கலம் உரக்கிடங்கில் பயோமைனிங் பணிகள்.
இ) சிறப்பு தங்குமிடம், அரசு மருத்துவமனை வளாகம்.
ஈ) அலுவலக கட்டிடம், குளித்தலை நகராட்சி.

| | | |
|---|---|---|
| | ரூ. | 190000.00 |
| SGST 9% | ரூ. | 17100.00 |
| CGST 9% | ரூ. | 17100.00 |
| மொத்தம் | ரூ. | 224200.00 |

செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). அவசர அவசியம் கருதி 22.03.2019 அன்று ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1804/2017/இ1)

பொருள்–34. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு லாரி TN-47-E-0264 வாகனத்தின் குடிநீர் தொட்டி (Water Tank) மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. 5000 லிட்டர் கொள்ளளவு உள்ள புதிய குடிநீர் தொட்டி விநியோகம் செய்யும் (Delivery) குழாய்கள் உள்ளிட்ட அமைப்புகளுடன் புதியது மாற்றம் செய்து பொருத்துதல், பெயிண்டிங் செலவுகள் உள்படி ரூ.3.00 லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.771/2019/இ1)

பொருள்–35. இந்நகராட்சிக்கு 2018–2019.ஆம் நிதியாண்டின் ஆண்டு கணக்கு முடித்து, Thiru.K.S.Niranjan அவர்களால் பணி முடித்துக்கொடுக்கப்பட்டுள்ளது. கணக்கு தணிக்கை ஆய்விற்கு சமர்ப்பிக்க ஏதுவாக, 2018–2019.ஆம் ஆண்டுகளுக்கு கணக்கு முடித்து வழங்கப்பட்ட வகையில், அன்னாருக்கு 2018–2019.ஆம் ஆண்டுக்கு ரூ.95,000/– (ரூபாய் தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) வழங்குவதற்கு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

1). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி 2018–2019.ஆம் ஆண்டு கணக்கு முடித்து வழங்கிய நிலையில், Thiru.K.S.Niranjan அவர்களுக்கு ரூ.95,000/– (ரூபாய் தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1658/2016/பி1)

பொருள்–36. இந்நகராட்சிக்கு தற்போதுள்ள அரசு விதிகளின்படி, நகராட்சி ஒப்பந்ததாரர்கள் மற்றும் நகராட்சிக்கு கட்டுப்பட்ட வணிக மையங்களுக்கு சேவை கட்டணம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு GST Migration TDS & GST Migration Service Tax 2019–2020–ஆம் நிதியாண்டிற்கு, Thiru.T.Shanmugamoorthi, GST Practitioner மூலம் பணிகள் பார்க்கும் நடவடிக்கைகளுக்கும், பிரதி மாதந்தோறும் GST Filling பணிகளுக்கும், அதற்காகும் செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, 01.10.2018 முதல் GST Registration and Migration TDS & GST Migration Service Tax – GST Filling ஆகிய நடவடிக்கைகளுக்கு Thiru.T.Shanmugamoorthi, Private GST Practitioner மூலம் பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கும் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1658/2016/பி1)

பொருள்–37. இந்நகராட்சி தனிநபர் கழிப்பறை கட்டும் பணிக்கு தேவையான சிமெண்ட், Clascet மற்றும் கதவு ஆகியவற்றை CSR நிதியிலிருந்து வாங்குவதற்கு நாள்–01.03.2019.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும், அதன் அடிப்படையில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | கதவு (1) ரூபாயில் | Clascet ரூபாயில் | சிமெண்ட் (1) விலை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1) | காவேரி டிரேடர்ஸ், துறையூர்ரோடு, முசிறி | 540.00 | 340.00 | 385.00 |
| 2) | ஜமால் டிம்பர் டிப்போ, துறையூர்ரோடு, முசிறி | 520.00 | 320.00 | 380.00 |
| 3) | பாத்திமா டிரேடர்ஸ், துறையூர்ரோடு, முசிறி | 560.00 | 350.00 | 395.00 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் CSR நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜமால் டிம்பர் டிப்போ நிறுவனத்திற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதையும் செலவினம் பட்டியல்படி வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.440/2019/எச்1)

பொருள்– 38. குளித்தலை நகராட்சிக்கு 'GST' மற்றும் 'GST TDS' பதிவு சான்று மற்றும் 'GST TDS'அரசு கணக்கில் செலுத்துவதற்குரிய சலான் மற்றும் 'Filling Process' ஆகியவற்றை திரு.M.சண்முகமூர்த்தி, 'GST Practitioner' கரூர் அவர்களை தொடர்புகொண்டு பெறப்பட்டது. எனவே, அரசின் கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு, மத்திய அரசின் சேவை மற்றும் 'GST' பதிவு சான்று பெறும் நோக்கில், அவசர அத்யாவசியம் முன்னிட்டு, மேற்படி திரு.M.சண்முகமூர்த்தி, கரூர் அவர்களின்மூலம் 'GST' தொடர்பான அனைத்து பணிகளும், அக்டோபர் 2018 முதல் மார்ச் 2019 வரை பார்த்தமைக்கும், அன்னாருக்கு வழங்க வேண்டிய மேற்படி பணிகளுக்குரிய பில்பட்டியல் தொகை ரூ.44,840/– (ரூபாய் நாற்பத்தி நான்கு ஆயிரத்து எண்ணூற்றி நாற்பது மட்டும்) வழங்குவதற்கும், அன்னாரின் பில்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அரசின் கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு, இந்நகராட்சிக்கு 'GST' மற்றும் 'GST TDS' பதிவு சான்று மற்றும் 'GST' தொடர்பான அனைத்து பணிகளும், திரு.M.சண்முகமூர்த்தி, கரூர் அவர்களின் மூலம் மேற்கொண்டமைக்கு மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, திரு.M.சண்முகமூர்த்தி அவர்களுக்கு பில்பட்டியல் தொகை ரூ.44,840/–ஐ, மன்றம் முன்அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1658/2016/பி1)

பொருள்– 39. குளித்தலை நகராட்சியின் குடிநீர் பிரிவு ஈப்பு வாகனம் TN-47-X-3173, 22.05.2019 அன்று அலுவலகப் பணியின் காரணமாக வார்டு 14, பெரியார்நகர் பெரியபாலம் அருகே, திருச்சி–கரூர் சாலையில் வந்துகொண்டு இருந்தபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகிவிட்டது. மேற்படி விபத்தினால் உயிர்சேதமோ அல்லது தனியார் வாகனம் சேதமோ ஏற்படவில்லை. நகராட்சி ஈப்பு மட்டுமே சேதமடைந்துவிட்டது. எனவே, குளித்தலை யுனைடெட் இந்திய இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., நிறுவனத்தால் 13.01.2020 வரை விபத்து காப்பீடு செய்யப்பட்டு உள்ளதால், இந்நிறுவனம்மூலம் இன்சூரன்ஸ் தொகை பெறவும், கூடுதல் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– குடிநீர் பணி அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1154/2019/இ1)

பொருள்– 40. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைநதுள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான பொருட்கள், அரசாணை(நிலை) எண்.118–ல், நாள்–26.09.2014.ல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேலும் அரசாணை(ப) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, நாள்–17.01.2013.ல் தெரிவித்துள்ளதாலும், கீழ்க்கண்ட விபரப்படி 2019–2020–ம் ஆண்டுக்குரிய (01.04.2019 முதல் 31.03.2020 வரை) பொருட்கள் வாங்கி அம்மா உணவகத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.55.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | அரிசி | = | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கி, அய்யர்மலை |
| 2) | மளிகை பொருட்கள் | = | கரூர் மாவட்ட மொத்த கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை YH.159, கரூர். |
| 3) | எரிவாயு உருளைகள் | = | ஸ்ரீமூகாம்பிகை கேஸ் ஏஜென்சீஸ், குளித்தலை. |
| 4) | பால் | = | ஜி.யுவராணி, 39/50, பழையகோர்ட்தெரு, குளித்தலை. |
| 5) | காய்கள் விநியோகம் | = | திருமதி.ஜி.யுவராணி, 39/50, பழையகோர்ட்தெரு, குளித்தலை. |
| 6) | அம்மா உணவகத்தில் பணிபுரியும் "ஸ்ரீசாய்ராம் மகளிர் சுயஉதவி குழு" பணியாளர்கள் மாத ஊதியம் | | |
| 7) | மின்கட்டணம் மற்றும் பொருட்கள் ஏற்றிவரும் வண்டி வாடகை மற்றும் இதர செலவினங்கள். | | |
| 8) | உணவு விநியோகம் டோக்கன்கள், ஏற்கனவே அச்சிடும் பணியை மேற்கொண்ட நிறுவனமான, தமிழ்நாடு பல்நோக்கு சேவை கூட்டுறவு சங்கம், திருச்சி அவர்கள்மூலம் மேற்கொள்ள, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | | |

அலுவலக குறிப்பு– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினம் மன்ற அனுமதியை எதிர்நோக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் பொறுப்பு அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினதொகை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்படி உத்தேச செலவினம் ரூ.55.00 லட்சம், பொது நிதியின்கீழ் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1083/2014/இ1)

பொருள்– 41. குளித்தலை நகராட்சி நிலவரி வசூல்செய்ய மாநில கணக்காயர் அவர்களின் தணிக்கைத் தடையில் சுட்டிக்காட்டப்பட்டு, கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தணிக்கைத் தடை ஆய்வுக்கூட்டத்தில் உடனடியாக வசூல் செய்து, தணிக்கைத் தடையினை முடிக்க அறிவுறுத்தி, வட்டாட்சியர், குளித்தலை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்.அ2/172/2014, நாள்–08.05.2019.ல் தெரிவித்துள்ளார்கள். இந்நகராட்சியில் 2006–2007.ம் ஆண்டிற்கு சர்வே கட்டணமாக ரூ.1,00,000/–ஐ, சலான் எண்.28101, நாள்–22.10.2010.ல் அரசு கணக்கில் கட்டப்பட்டுள்ளது. 2007–2008.ம் ஆண்டிற்கு, சலான் எண்.2817, நாள்–22.10.2010.ல் ஒய்வூதிய பங்குத் தொகையாக ரூ.41232/– கட்டப்பட்டுள்ளது. சலான் எண்.D1031, நாள்–08.10.2012.ல் சர்வே கட்டணம் ரூ.1,00,000/– கட்டப்பட்டுள்ளது. சலான் எண்.6439, நாள்–05.06.2013.ல் சர்வே கட்டணம் ரூ.1,58,120/– கட்டப்பட்டுள்ளது. ஆகமொத்தம் 2007–2008.ல் ரூ.2,99,352/– முழுவதும் கட்டப்பட்டுள்ளது. 2008–2009.ம் ஆண்டிற்கு சர்வே கட்டணம் ரூ.281640/–, ஒய்வூதியப் பங்குத் தொகை ரூ.44850/– ஆகமொத்தம் ரூ.326520/–ஐ கட்டப்பட வேண்டும். இத்தொகை நீண்டகால நிலுவை என்பதால், அவசர அவசியம் கருதி தணிக்கைத் தடையை நீக்கம் செய்ய அரசு கணக்கில் உடன் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2149/2007/பி2)

பொருள்– 42. குளித்தலை நகராட்சியில் குடிநீர் விநியோகம் நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையங்கள்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. குடிநீர் பிரிவின் அத்தியாவசியம் கருதி, தற்போது ஐந்து ஒப்பந்த பணியாளர்கள்மூலம் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. குடிநீர் பணிக்கு “01 ஜுலை 2019 முதல் 30 ஜுன் 2020” வரை ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்கள் ஆறு நபர்கள் பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). எதிர்வரும் 2019–2020 வருடத்திற்கான தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் பெறப்பட்ட உடன் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1160/2019/இ1)

பொருள்– 43. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு ஈப்பு TN-47-X-3173 வாகனத்தின் டயர்கள் 94184 கி.மீ. வரை ஓடி மிகவும் தேய்ந்து உள்ளது. எனவே, மேற்படி வாகனத்தின் 4 டயர்கள் புதியது வாங்க உத்தேச செலவினம் ரூ.28,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1040/2019/இ1)

பொருள்– 44. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு ஈப்பு TN-47-X-3173–ன் டயர்கள் 4 சப்ளைசெய்தல் பணி மேற்கொள்ள 16.05.2019.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 23.05.2019 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்ட விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | நிறுவனத்தின் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | பிரிட்ஜ் ஸ்டோன் 215x75 டயர் D689 4 எண்ணிக்கைகள் சப்ளை செய்தல் | M.A.டயர் கார்ப்பரேசன், 49ஏ,பாரதியார்சாலை, திருச்சி–1 | ரூ.27320/– |
| | | ஆபிரகாம் ஏஜன்ஸிஸ், 60/8, 60/9,மேலப்புதூர் மெயின்ரோடு, திருச்சி–1 | ரூ.28320/– |
| 2) | 4 வீல் பேலன்சிங் அலையன்மெண்ட் | A.C. டயர்ஸ், 3–ஏ/3, ஆட்சியர் அலுவலக சாலை, கன்டோண்ட்மெண்ட், திருச்சி–1 | ரூ.28070/– |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள M.A.டயர் கார்ப்பரேசன், திருச்சி–1 நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1040/2019/இ1)

பொருள்– 45. குளித்தலை நகராட்சி 24–வார்டுகளிலும் தெருநாய்களின் இனப்பெருக்கம் அதிகமாகி பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை அடிக்கடி கடித்துவருவதாக புகார்கள் வரப்பெற்றதை அடுத்து 24 வார்டுகளிலும் உள்ள சுமார் 490 நாய்களுக்கு இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1024/2019/எச்1)

பொருள்– 46. குளித்தலை நகராட்சிப் பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரினேசன் செய்ய ஓராண்டிற்கு சுமார் 40,000 லிட்டர் ஹைபோ குளோரைடு திரவம் வாங்கவேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரு.7.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1121/2019/இ1)

பொருள்– 47. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் ஸ்டீம்மர் பழுது காரணமாக அவசர அவசியம் கருதி சமையல் பாத்திரங்கள் பெற 26.04.2019.ல் உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | டி.மகாலிங்கம், பி.எம்.விலாஸ் வாடகை பாத்திரக்கடை, குளித்தலை. | சாந்தி வாடகை பாத்திரக்கடை, குளித்தலை. | ஸ்ரீநல்லாண்டவர் பாத்திரக்கடை, குளித்தலை. |
|---|---|---|---|---|
| | | (நாளொன்றுக்கு வாடகை ரூபாயில்) | | |
| 1) | இரட்டைகியாஸ்அடுப்பு | 300.00 | 325.00 | 325.00 |
| 2) | இட்லி பானை | 300.00 | 350.00 | 325.00 |
| | | 600.00 | 675.00 | 650.00 |

அலுவலக குறிப்பு– 1). வரிசை எண்.1.ல் ஆன டி.மகாலிங்கம், பி.எம்.விலாஸ் வாடகை பாத்திரக்கடை குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று வாடகை பாத்திரங்கள் மேற்படி கடையில் பெற்றதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3). 26.04.2019 முதல் 04.05.2019 வரையிலான வாடகை ரூ.5400/–ஐ, பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.933/2019/இ1)

பொருள்– 48. திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதி 2016.ன்படி Clause 15 insist to prepare a Solid Waste Management Policy and Strategy on Solid Waste Management Following the SWM Rules 2016 அமுல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி கோட்பாடுகளை செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.660/2019/எச்1)

*******

# குளித்தலை நகராட்சி

28.05.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 63 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 64 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 65 | அலுவலக குறிப்பை ஏற்று அங்கீகரித்து அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 66 | அலுவலக குறிப்பை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 67 | பதிவு செய்யப்பட்டது. |
| 6 | 6 | 68 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 69 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 70 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 71 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 72 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 73 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 74 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | 13 | 75 | பதிவு செய்யப்பட்டது. |
| 14 | 14 | 76 | பதிவு செய்யப்பட்டது. |
| 15 | 15 | 77 | பதிவு செய்யப்பட்டது. |
| 16 | 16 | 78 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 79 | பதிவு செய்யப்பட்டது. |
| 18 | 18 | 80 | பதிவு செய்யப்பட்டது. |
| 19 | 19 | 81 | பதிவு செய்யப்பட்டது. |
| 20 | 20 | 82 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 21 | 21 | 83 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 22 | 22 | 84 | பதிவு செய்யப்பட்டது. |
| 23 | 23 | 85 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 24 | 24 | 86 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 25 | 25 | 87 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 88 | அனுமதிக்கப்பட்டது. |
| 27 | 27 | 89 | பதிவு செய்யப்பட்டது. |
| 28 | 28 | 90 | பதிவு செய்யப்பட்டது. |
| 29 | 29 | 91 | பதிவு செய்யப்பட்டது. |
| 30 | 30 | 92 | பதிவு செய்யப்பட்டது. |
| 31 | 31 | 93 | பதிவு செய்யப்பட்டது. |
| 32 | 32 | 94 | பதிவு செய்யப்பட்டது. |
| 33 | 33 | 95 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 34 | 34 | 96 | அனுமதிக்கப்பட்டது. |
| 35 | 35 | 97 | அனுமதிக்கப்பட்டது. |
| 36 | 36 | 98 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 37 | 37 | 99 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 38 | 38 | 100 | அனுமதிக்கப்பட்டது. |
| 39 | 39 | 101 | அனுமதிக்கப்பட்டது. |
| 40 | 40 | 102 | அனுமதிக்கப்பட்டது. |

..2..

| | | | |
|---|---|---|---|
| 41 | 41 | 103 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 42 | 42 | 104 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 43 | 43 | 105 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 44 | 44 | 106 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 45 | 45 | 107 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 46 | 46 | 108 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 47 | 47 | 109 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 48 | 48 | 110 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/— மு.கார்த்திகேயன்,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.